உ

முருகன் : : : :
: : : என் காதலன்



ஆக்கியோன்:

பாலகவி இராமநாதன்

உ

சிவமயம்

பாலருவாயர் துணை

ள் : : : :
: என் காதலன்

றக்குடி முருகப் பெருமான்
·53 வைகாசி விசாகநாளில்
ண்ணுமலை ஆதீன மடால
ின்கண் கொலுவீற்றிருந்த
று ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம்
ர்கள் திருவுளப் பாங்கின்
ரணம் கவியரங்கேறியது.

:-பாலகவி

காப்பு

முருக னேணைமணக்க
முன்னின் றருள்வான்
வருதோகைக் குஞ்சரத்து மன்

அறுசீர் விருத்தம்

அருகணைவார் வேண்டுநல
மனைத்தினையு மெளிதருள
வமருஞ் சேயை

யொருகணையான் மராமேழுந்
தொளைசெய்த வய்த்தவனுக்
குரிமை யாய

மருகனைமான் பிடிதழுவு
மார்பனைவேல் காம்பிடித்த
வள்ள றன்னை

முருகனையான் காதலனு
முபங்குதற்குச் செய்தவச்சீர்
மொழியற் பாற்றே 1

மயங்கிசைக் கொச்சகக் கலிப்பா

பூமேவு திசைமுகனும்
 பொன்மேவு மழைவணனுந்
தாமேவி யறிவரிய
 தலமேவி யினிதமர்வோன்
மனத்தாலு மொழியாலும்
 வளமருவு முடலாலு
மெனத்தாலு முணர்வரிய
 வியலமையு மெழிலுடையான்
ஆறாறு தத்துவங்க
 ளனைத்துமா யவைகடந்த
பேறாயு நின்றருளும்
 பெருமானந் தமிழ்முருகன்
அருவாகும் பெருவடிவ
 னருவுருவ மாத்தோன்றி

யுருவாக முன்வருவா
ஞொருமையுறு முளத்தினர்க்
[கே
:-எட்டடித் தரவு

வானகத்து யானையினை
வனத்தகத்து மடமானைத்
தானகத்துக் கொடுமணந்த
தமிழகத்துப் பெருவாழ்வே

தேம்பழுத்த கடம்புபுனை
திருத்தோளி லுருத்தோயு
நாம்பழுத்த கலம்பமுக்க
நண்ணுவடி வேலினனே

அடைந்தாரைப் புரக்கின்ற
வறக்கருணை யனாகாது

கிடந்தாரை யுறுக்குமறக்
  கிளர்வுடைய பெருமானே
தவவலியால் வருமாற்ற
  றனைமாற்ற நெறிப்படுத்த
வவனிலையா ரவுணனைமுன்
  னழித்தாண்ட வருளினனே
அயனாகி யரியாகி
  யரனாகி யவர்க்கப்பால்
வியனுரு மிருவருமாய்
  விளங்குகின்ற தனிமுதலே
கண்டார்கள் காதலிக்குங்
  கவினுடைய திருவுருவங்
கொண்டாரு மயிலேறிக்
  குலவுகின்ற சிவக்கொழுந்தே
:-ஈரடித் தாழிசைகள்

அவனவ ளதுவெனு
மவையமை வகைனமயி
லிவனுடை வகையிது
வெனவறி வரியவன்

ஒருமையு மிருமையு
மொருமையின் மருவிய
பெருமையு மமைவுறு
திருவுணர் வரியவன்

முதலென விடையென
முடிவென விவையல
திதுவென வெவர்களு
மெளிதறி வரியவன்

குறியெது குணமெது
குலவிய வுருவெது

நெறியெது வெனவுறு
நிலையுணர் வரியவன
:-ஈரடி அராகங்கள்

பூவுலகம் புரந்தரனூர்
பொன்னுலகந் தன்னினுஞ்சீர்
மேவியதென் றுணர்த்துதற்கு
வேட்டமக ளடிபணிந்தோன்
உயிர்களுறு மிடும்பையெலா
மொழிப்பதற்காக் குன்று
[தொறும்
பயில்முருக னறுமுகஞ்சீர்ப்
பன்னிரண்டு கரம்படைத்
[தோன்

திருமகளுங் கலைமகளுஞ்
செயமகளுங் குற்றேவல்

பெருமையுடன் புரிகின்ற
பீடமைந்த பேராளன்

அன்பாலே வழிபடுவா
ரவர்க்கிரங்கி யாட்கொண்டு
தன்பாலே யகலாத
தனிநலத்தை வழங்கிடுவோன்
:-ஈரடித் தாழிசைகள்

போகியா யிருந்தருள்வான்
போகத்தை யூட்டுவிப்பான்
யோகியா யமர்ந்திருப்பா
னுயர்வுடைய கதிதருவான்

:-இருசீர் ஓரடியம்போதரங்கம்

நிலனவான் வானவான்
நெருப்பாவான் காலாவான்

சலனுவான் கதிராவான்
    சசியாவா னுயிராவான்
:-ஒருசீர் ஓரடி யம்போதரங்கம்

எனவாங்கு, (தனிச்சொல்)

உலகியற் கலைகளை
    யோதி யறிந்தவ
ரிறையியற் கலைகளை
    யினிதி னுணர்ந்தவர்
முருகன் பெருமையை
    மொழிந்தன ராக
வவர்மொழி கேட்ட
    தவமுறு மடியேன்
குன்ற மெறிந்து
    துறைகடற் சூர்தடி

என்று மிஃளயா
னெழில்வடி வுடையான்
பாலமை காதல்
சாலவுங் கொண்டேன்
திருப்பெயர் கேட்டபின்
விருப்பமற் றுென் றினுஞ்
செல்லா நிஃலயிற்
பிரிந்தது செவ்வேள்
திறத்திஃனத் தெரிந்தபின்
புறத்துள வுறவெலாம்
விடுத்திட லாயினே
னடுத்திடு முருக
னிருப்பிஃன யறிந்தபின்
பருப்பதஞ் சூழுல
கியலிஃன யகன்றேன்
மயலறும் வகையினி

லாரா வின்ப
மளிப்பது குறித்தான்
யான்வே றெனவுக்
தான்வே றெனவு
மில்லா நிலைமையை
யியலுறக் காட்டினன்
பெற்றவவ் வின்பப்
பெருமையைச் சொல்லினு
மற்றவ ரறியா
வாய்மையிற் படுமே.

:-ஆசிரியச் சுரிதகம் 2

கலிவெண்பா.

இனியமதித் தோற்றமு
மியாழிசையும் வானோர்
தனியமுதத் தின்சுவையுந்
தண்ணார்-பனியமுதப்

பொய்கைக் கமலப்
    புதுமணமுந் தென்றற்கால்
பெய்யும் பெருநலமும்
    பேசுபுகழ்-வையயிலோன்
கூடி மருவிக்
    குலவி யெனைக்கலந்து
பீடுபெற நல்குமருட்
    பேரின்பத்-ஈடாமோ
காதலியைக் காதலன்முன்
    கட்டி யணைத்துமெய்யின்
மீது சுகந்தருதல்
    மெய்யுலகத்-ஈதன்றி
யூனி லுடலி
    லுயிரி லுளத்தடைவிற்
கானிற் பொலியுங்
    கடம்புடையா-ஞனிலையென்

ருகக் கலந்த
வமைதி பிறக்குண்டோ
போகத் திருப்பார்
புறத்திருப்பா-ராகத்தி
னுள்ளே புகுந்துகலந்
தொன்றுவரோ வெந்நாளும்
விள்ளா நிலையில்
விளங்குவரோ - கள்ளநெறி
காட்டி மனங்கவர்ந்து
காதல் பெருகுநெஞ்சைக்
கூட்டியதற் குள்ளிருந்து
கொள்வாரோ-நாட்டிலிலாப்
புத்தம் புதியமுறைப்
பொற்புடனென் காதலனு
நத்தினன் செவ்வேள் நயந்து.3

தாழிசைகள்

உள்ளகத்தே நின்றொளிரு
மொருமுருகன் சிலவேலை
யொளிந்து கொள்வான்

புள்ளகத்தே வருமவனைக்
காணாது புழுங்குமென்சிர்
புகலற் பாற்றே 4

பெற்றோரைத் தோழியரைப்
பின்னையென்பா லன்புசெயக்
கற்றோரைக் கண்டாற்
கடுங்கோப மாகுவதே 5

ஊணில் விருப்ப முண்டாகா
துறக்கங் கொள்ள வழியில்லை

விணிற் பாயன் மிசைப்புரண்டு
வெதுப்பே வடிவா யிருப்பே
[னே 6

நேரிசை வெண்பா.

பச்சைப் பசுங்கிளியே
பாலோடு தேன் றருவே
னிச்சை மிகுதியினு
லியானடையு-முச்சநோய்
தன்னை யுரைத்துத்
தமிழ்முருகப் பெம்மானென்
முன்னை யிருக்க மொழி. 7

கனவின் மருவிக்
கலந்தின்பந் தந்தாய்
நனவிற் கலப்பதுவே
நன்றும்-வினவிப்

புனத்தடைந்து வள்ளிதங்கை
  போற்றப் புணர்ந்த
வனக்கரிய தேதுண் டுரை 8

கட்டளைக் கலித்துறை.

கல்லார் தொழுங்குன்ற
  மன்னகர் வான்வெற்பி
  ளுயகன்றான்
சொல்லாரும் வாய்முகங்
  கைகால் விழியெனத்
  தோன்றுகின்ற
வெல்லா வுறுப்பையுந்
  தாமல ராக்கி
  யிதயமொன்றைக்
கல்லாக்கிக் கொண்டன
  னீதோ வவன்றன்
  கருணையதே. 6

அறுசீர் விருத்தம்.

பங்கத்தை யடையா தென்றும்
பரிவொடு மலர்வே யார்ந்து
திங்களைப் பனியைச் சேர்ந்தாற்
சிறிதுவாட் டமுமு ருத
மங்கையின் முகம்போல்மற்றோர்
வனசமுண் டோவென் றங்காள்
பொங்கிய வெப்பு ரைத்தான்
புனிதனை முருக வேளே 10

கலி விருத்தம்

மேரு மாமலை
மீதி ருந்தவர்
சாரு மம்மலைத்
தாளர் தம்மைமுன்

சேரு மாறுமாற்
சேவர் செய்தெனச்
சாரு மென்னைவேற்
சாமி சார்ந்ததே.

தாழிசை

வடிவேலை யுடையவன்
னடிநாளி லினிதே
வலமேவு நலமோடு
மகிழ்வோடு மெனையே
படிமீது நடமாடு
மடவார்க ளறியாப்
படியாக மிகுமின்ப
முறுமா றணைத்தான்

நேரிசை வெண்பா

என்னாளும் பொழுதெல்லா
　மின்பம் விளைத்திடுமே
கண்ணுங் கருத்துங்
　களித்திடுமே—அன்னைலான்
குன்றக் குடியிற்
　குலவுந் திருமுருகன்
கன்றிற் கலந்ததனை நான்

நலம் பெருகுக